## வணக்கம்!

### கல்வி – சனிக்கிழமை - 09:30 -12:30 (10:45 - 11:15)

வழமையான நேரத்தில் வழமைபோல் நடைபெறும்.

**-அன்னை தமிழ்முற்ற தெரிவு போட்டிகள் 09.03.2024 லோறன்ஸ்கூக் வளாகத்தில்.**
**-அன்னை தமிழ்முற்ற இறுதி போட்டிகள் 16.03.2024 ரொம்மன் வளாகத்தில்.**
அன்னை தமிழ்முற்ற போட்டிகள் 2024 விபரம் – எழுத்து மற்றும் ஒலிவடிவத்துடன்.

அன்னை முற்ற போட்டி விண்ணப்ப படிவம் முடிவு திகதி 09.02.2024

### கலைவகுப்புகள் - சனிக்கிழமை

சித்திரை விழாவை முன்னிட்டு அவ்விழாவிலே மேடை ஏற்றுவதற்காக பரீட்சார்த்த முயற்சியாக கலை பயில விரும்பும் மாணவர்களை உள்வாங்கும் நோக்கோடு சங்கீதம், பரதநாட்டியம் மற்றும் நடனம் (freestyle) போன்ற கலை வடிவங்களை இரண்டு மாதங்களுக்கு இலவசமாக கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான முன்பதிவுப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி விரைந்து முன்பதிவுகளை மேற்கொண்டு உங்கள் பிள்ளைகளை பயனடைய செய்யவும்.

தொடர்புகளுக்கு கலைப்பொறுப்பாளர்
கை தொ பே இல: 400 58 232
மின்னஞ்சல் முகவரி: thuratharang@annai.no

**- குறும்பட போட்டி 2024 - புளுரோ வளாகம்.**
மேலதிக விபரங்கள் புளுரோ வளாக இணைய தளத்தில் பார்வையிடலாம்.

**- சர்வதேச தமிழ்நுண்கலைப் படைப்பாற்றல் மையம்.**
2024 தேர்வுகள் சார்ந்த தகவல், இணைப்பை பார்வையிடவும்.

### ஆண்டுக்கூட்டம் 2024 – 02.03.2024

02.03.2024 அன்று எமது ஆண்டுக்கூட்டம் நடைபெற இருப்பது அனைவரும் அறிந்ததே!

நாம் ஏற்கனவே அறிவித்தது போல் அக்கூட்டத்திலே நீங்கள் முன்வைக்க விரும்பும் கேள்விகளை 31.01.2024 இற்கு முன் அனுப்பி இருக்க வேண்டும். அப்படி அனுப்பப்பட்ட கேள்விகளுக்கே எம்மால் பதிலளிக்க முடியும். அதுவும் முழுமை பெற்ற அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு:
ஆண்டுக்கூட்டத்திலே அனைவரும் பங்கேற்கலாம். ஆனால் கேள்வி கேட்கும் தகைமைக்கு உரித்தானவர்கள் முழுமை பெற்ற அங்கத்தவர்கள் மட்டுமே! அந்த வகையில் 2023 ஆம் ஆண்டு (vår) இலைதளிர் காலம் வரையான தவணைக் கட்டணங்களை செலுத்தியவர்களாக இருத்தல் வேண்டும்.

எனவே அன்பார்ந்த பெற்றோர்களே!
உங்கள் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதா? என்பதை சரிபார்த்து கொள்ளவும். இதில் ஏதும் ஐயப்பாடு இருப்பின் நிதிப் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மின்னஞ்சல் முகவரி: nandhakumarj@annai.no

அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்,
லோறன்ஸ்கூக்
ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER,
LØRENSKOG

## எமது வளாக இக்கல்வியாண்டில் நடைபெறவுள்ள நிகழ்வுகள்

**02.03.2024 ஆண்டுக்கூட்டம் 2024**
**13.04.2024 சித்திரை விழா**
**09.06.2024 விளையாட்டுப்போட்டியும் கல்வியாண்டு நிறைவும்.**

குறிப்பு: சூழ்நிலைக்கேற்ப வரும்மாற்றங்களுக்கு எம்மை புரிந்துணர் வோடு தயார்நிலைப்படுத்துவோம்.

## நிதி

இதுவரை அறவிடப்பட்ட அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம். செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

## சிற்றுண்டிச்சாலை

**இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்**. 10:15 முதல் மேல்க்கட்டிடத்தில் சிற்றுண்டிகள் விற்பனையில் இருக்கும் அனைவரும் அவ்வேளை வந்து பிள்ளைகளுக்காகவோ அல்லது தங்களுக்காகவோ தேவையானவற்றை வாங்கலாம். ***தாங்கள் பயன்படுத்தும் உணவுப்பொருட்கள் அல்லது தேனீர் அருந்தும் கோப்பைகள் இருப்பின் அவற்றை அப்புறப்படுத்தி சுத்திகரித்துச் செல்லல் வேண்டும். புரிந்துணர்வுக்கு நன்றி.***

## முக்கிய கவனம் மற்றும் வேண்டுகோள்!

மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.

பாடசாலையில் தீப்பிடித்ததற்கான அறிகுறியை அறிவிக்கும் அபாயமணி ஒலிக்கும்பட்சத்தில் (Brannalarm), அனைவரும் கட் டிடங்களிலிருந்து தாமதமெதுவுமின்றி வெளியேறவேண்டும். அனைவரும் அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) வாகனத்தரிப்பிடத்திலுள்ள கொடிக்கம்பத்தினருகே ஒன்றுகூடவேண்டும்.

வகுப்பிலுள்ள மாணவர்களை வெளியே கூட்டிவருவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். பெற்றோர்கள் வகுப்பறை நோக்கிச் செல்வதற்கு அனுமதியில்லை.

எப்பொழுதும் வாகனங்களை அவசர வாகனப் போக்குவரத்துக்கு இடையூறின்றி (brannbil, ambulanse osv) நிற்பாட்டுதல் அவசியமென்பதை நினைவிற்கொள்க!

எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப் பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். தொலைபேசி இல. 918 75 537.

## தமிழை வளர்க்கப் பணிபுரிவோம்!

நன்றி.

இவ்வண்ணம்
நிர்வாகம்
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் லோறன்ஸ்கூக்**